

பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 45

21.07.2026

லஞ்சம் கேட்டு பெற்ற வருவாய் ஆய்வாளர் கைது

புகார்தாரர் திருமதி.ஈஸ்வரி, பாம்பாட்டிப்பட்டி, அரசங்குலம், முகவனூர் வடக்கு, மனப்பாரை தாலுகா, திருச்சி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தனது தந்தை பெயரில் வாரிசு சான்றிதழ் வேண்டி வருவாய் அலுவலகம், மனப்பாரை தாலுகா, திருச்சி மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பிரிந்துரை செய்ய திருமதி.ஹேமலதா, வருவாய் ஆய்வாளர், வி.பெரியப்பட்டி பிர்கா, மனப்பாரை தாலுகா, திருச்சி மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.4,000./ லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருச்சி பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 21.07.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி.ஹேமலதா, வருவாய் ஆய்வாளர், லஞ்ச பணம் ரூ.4,000/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

PRESS RELEASE – 45
21.07.2026

REVENUE INSPECTOR ARRESTED FOR BRIBE

The complainant Tmt.Eswari, Pampattipatty, Arasangulam, Mugavanur North, Manapparai Taluk, Trichy District, had applied for legal heir certificate in the name of her father at Revenue Office, Manaparai Taluk, Trichy district. Tmt.Hemalatha, Revenue Inspector, V.Periyapatti Firka, Manapparai Taluk, Trichy District, demanded Rs.4,000/- as bribe to process and recommend legal heir certificate. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Trichy detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (21.07.2026). During trap proceedings, Tmt.Hemalatha, Revenue Inspector, demanded and received the bribe amount of Rs.4,000/- from the complainant. The accused was arrested.